பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 14 | வெள்ளிக்கிழமை | 01.12.2023 | அதிர்வு 122

## மதுரங்குளி குளத்திலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – மதுரங்குளி பகுதியில் உள்ள சிறிய குளத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மதுரங்குளி, ரந்தியாகம பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தோபர் 07▶

# மட்டக்களப்பில் ‘கேக்’ விற்ற சிறுவன் கூட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது



### சபையில் ஜனா எம்.பி. ஆதங்கம்

(சுடர் திலீபன்)

பேக்கரியில் “கேக்” விற்ற ஒரு சிறுவன் மாவீரர் தினத்தைக் காரணம் காட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே இந்த விவகாரத்தைச் சபையின் கவனத்துக்கு ஜனா எம்.பி. கொண்டு வந்தார். 03▶

# தேசிய தேர்தல்களை விரைந்து நடத்துங்கள்!



### ஜனாதிபதி ரணிலுக்கு சந்திரிகா வலியுறுத்து

– ஏ.ஜே. சார்ள்ஸ் –

**“மக்கள் ஆணையுள்ள பலமிக்க தலைவரையும், அரசையும் நாட்டு மக்கள் மாத்திரமல்லர் சர்வதேசம் கூட விரும்புகின்றது. எனவே, தேசிய தேர்தல்களை விரைந்து நடத்த வேண்டிய கட்டாயத்துக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந்துள்ளார்.”** 04▶

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை நேற்று 8 மணி நேரம் துருவியது சி.ஐ.டி.

### இன்றும் விசாரணைக்கு அழைப்பு



(கே.பாரதி)

மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்னிலையாகி சுமார் 8 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார்.

அவர் மேலதிக விசாரணைகளுக்காக இன்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கு 07▶

# ரொஷானுக்கு கால அவகாசம்



(கே.பாரதி)

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது. 07▶

# எரிபொருள் விலையில் நள்ளிரவு முதல் மாற்றம்




### புதிய விலை அறிவிப்பு

(கே.பாரதி)

எரிபொருள் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இந்த மாற்றம் 07▶




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் ஸ்ரீதரன் எம்.பி. அல்லது சுமந்திரன் எம்.பி. என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவின் பத்து ஆண்டு காலத் தலைமைத்துவம் கட்சியின் அடுத்த தேசிய மாநாடு இன்னும் இரண்டு மாதங்களில் – பெரும்பாலும் ஜனவரி 28ஆம் திகதி – நடைபெறும் போது முடிவுக்கு வரும் என்பது பெரும்பாலும் 04▶

# கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பு ஆரம்பம் கட்டுப்படுத்துவது குறித்து ஆராய களவிஜயம்









(நூருல் ஹுதா உமர்)

கல்முனை தொகுதியில் சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை தொடர்ந்து இப்போது கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பு ஆரம்பித்துள்ளது. கலரிப்பின் பாதிப்பு நிலை தொடர்பில் மீனவ அமைப்புக்கள் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களின் போது இது சம்பந்தமாகவும் ஜனாதிபதி செயலாளர், அரச உயர்மட்டங்கள், சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் எடுத்துக்கூறியிருந்தார். அதன் பயனாக கரையோரம் பேணல் திணைக்கள கிழக்கு மாகாண பொறியியலாளர் எம்.துளசிதாசனை தொடர்பு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், அப்போது முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரம் கல்முனைக்கு நேற்றுக் களவிஜயம் மேற்கொண்ட மாகாண பொறியியலாளர் எம்.துளசிதாசன், கரையோரம் பேணல் திணைக்கள கல்முனை பிரதேச செயலகத்திற்கான அதிகாரி எம்.எச்.மப்ரூக் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் பிரதிநிதிகள், அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப் படகு மீன்பிடி உரிமையாளர் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எஸ். அப்துல் ஹமீட் (நஸீர்), மீனவர் சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

இவ்வேலைத்திட்டம் முன்னெடுப்பது சம்பந்தமான மதிப்பீட்டறிக்கையை விரைவாக செய்து இவ் வேலைத்திட்டத்தை அவசரமாக முன்னெடுக்க தயாராக உள்ளதாக துளசிதாசன் தெரிவித்தார்.

இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க தேவையான நிதியை பெறுவது தொடர்பில் வரவு –செலவு திட்டத்திற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு சிறைக் கைதி மரணம் குறித்துச் சந்தேகம்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட சிறைக்கைதி ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய சோமசுந்தரம் துரைராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சட்ட விரோதமான முறையில் கசிப்பு சாராயம் உற்பத்தியில் ஈடுபட்டு விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் கடந்த வாரம் கொக்கட்டிச்சோலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். கடந்த செவ்வாயன்று இவருக்கு ஏற்பட்ட உடல் நலக்குறைவினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பரிவில் அனுமதிக்கப்பட்ட போது மரணமடைந்துள்ளார். பின்னர் மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போலின் உத்தரவிற்கு அமைய சம்பவ இடத்திற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் நேரில் போய் சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

இந்நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையின் போது சடலத்தில் உடலின் உட்பகுதியில் காயங்கள் காணப்பட்டதனையடுத்து சம்பவம் பற்றி திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸாரின் ஊடாக நீதிவானின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த நீதிவான் பீற்றர் போல், சடலத்தைப் பார்வையிட்டார். மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏறாவூர் புன்னக்குடாக் கடலில் மூழ்கிய சிறுவனின் சடலம் மீட்பு

ஏறாவூர் புன்னக்குடாக் கடற்கரையில் செவ்வாய் மாலை நண்பர்களுடன் நீராடச் சென்ற வேளை கடலில் மூழ்கிக் காணாமல் போயிருந்த 15 வயது சிறுவன் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செங்கலடி ஐயங்கேணி பகுதியைச் சேர்ந்த ஜெகன் லதுஷன் (வயது-15) என்ற சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

உயிரிழந்தவர் உட்பட 5 பேர் கொண்ட நண்பர்கள் குழு செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் கடலில் நீராடச் சென்றுள்ளனர். கடல் கொந்தளிப்பாகக் காணப்பட்ட நிலையில் இவர் கடல் அலையினால் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் காணாமல் போனவர் நேற்று மாலை 7 மணியளவில் களுவன்கேணி கடலில் சடலமாக மிதப்பதை அவதானித்த மீனவர்கள் - கரைக்கு எடுத்து வந்தனர்.

மீட்கப்பட்ட சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.நசீர் சடலத்தை பார்வையிட்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீரற்ற காலநிலை காரணமாக யாழில் 298 நபர்கள் பாதிப்பு!



சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 85 குடும்பங்களைச் சேர்ந்த 298 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அதிகபட்சமாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 83 குடும்பங்களை சேர்ந்த 291 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நினைவேந்தலைக் குற்றமாக்க இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பாவிப்பதா?

## சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பு கேள்வி

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதியளித்துள்ள போதிலும் மாவீரர் நாளில் அமைதியான முறையில் நினைகூருவதை குற்றமாக்குவதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துவது குறித்து இலங்கையின் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பு (பேர்ள்) கரிசனை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில் தமிழர்களிற்கு எதிராக பாதுகாப்புபடையினரின் நடவடிக்கைகள் முன்னைய அரசாங்கங்கள் போல தற்போதைய அரசாங்கமும் சிங்கள,பௌத்த பேரினவாத கொள்கைளைப் பேணுவது குறித்த அர்ப்பணிப்புடன் உள்ளதை புலப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

அத்துடனத் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கம் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதையும் இலங்கையில் தமிழர்களின் குரல்களை ஒடுக்க முயல்வதையும் கண்டிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.




குறிப்பாக அவர்கள் இந்த கடினமான தருணங்களில் தங்களின் நேசத்திற்குரியவர்களை நினைகூரும் இந்த தருணத்தில் இலங்கை அரசாங்கம் மேற்படி தமிழர்களின் குரல்களை ஒடுக்க முயல்வதை சர்வதேச கண்டிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மட்டக்களப்பில் கடந்த வாரம் 10 இற்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனக்குத் தெரிந்த ஒரு சிறுவன் மட்டக்களப்பில் உள்ள பேக்கரியில் வேலை செய்கின்றார். அவர் கடந்த வாரம் கேக் ஒன்றை விற்றுள்ளார். அந்தக் கேக்கை வாங்கியவர் அதனைக் கொண்டுபோய் அதில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என பெயர் எழுதியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் குறிப்பிட்ட பேக்கரிக்குச் சென்று சி.சி.ரி.வி. கமராவை ஆராய்ந்துள்ளனர். அதில் அந்தச் சிறுவன் கேக்கை மாத்திரம்தான் கொடுத்துள்ளார். அதில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என எழுதிக் கொடுக்கவில்லை.

ஆனால், அந்த பேக்கரியில் வேலை செய்த குற்றத்துக்காக அந்தச் சிறுவன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்படியே செல்லுமாக இருந்தால் இந்த நாடு அழிந்து போகும்.” - என்றார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிச்சயமாகிவிட்டது.

மீண்டும் தலைவராவதற்கு தமது பெயரை மாவை சேனாதிராஜா சமர்ப்பிக்கவில்லை என்பது அதற்கான காலக்கெடு நேற்று முடிந்த போது உறுதியாகிவிட்டது.

மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் கட்சிக்கு அவர் தலைமை தாங்கி இருக்கின்றார். எனினும், தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் மூத்த தலைவர் இவ்விடயத்தை ஒட்டி சுட்டிக்காட்டிய விவகாரத்தை இங்கு பகிர்வது முக்கியம் என்று நினைக்கிறேன்.

1973 செப்டம்பர் 7ஆம் திகதி மல்லாகத்தில் நடந்த தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் கட்சியின் ஆறாவது தலைவராக அமிர்தலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அப்போது அமிர்தலிங்கத்துக்கும் சொல்லின் செல்வர் இராஜதுரைக்கும் இடையில் தலைமைத்துவத்துக்குப் போட்டி இருந்தது – இப்போது சுமந்திரன் – ஸ்ரீதரன் இடையில் இருப்பது போல. (அமிர்தலிங்கம் – இராஜதுரை ஆளுமைப் போட்டியை சுமந்திரன் – ஸ்ரீதரன் ஆளுமைப் போட்டியுடன் வாசகர்களே ஒப்பிட்டுக் கொள்வார்களாக!

தந்தை செல்வாவும் ஏனைய மூத்த தலைவர்களும் போட்டியில்லாமல் ஒரு தலைவராக அமிர்தலிங்கம் தெரிவாகுவதற்கு ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்களே தவிர, அமிர் – இராஜதுரை என்ற இரு தலைவர்களுக்கு இடையிலும் உண்மையான புரிந்துணர்வை – இணக்கத்தை – ஏற்படுத்தவில்லை. அதன் விளைவை தமிழரசு கட்சி பின்னர் நன்கு பட்டுணர வேண்டியதாயிற்று.

அப்போதாவது நேரடித் தேர்தல் போட்டி வராமல் ஒருவரைத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்க ஏனைய தலைவர்களினால் முடிந்தது. இப்போது அதுவும் இல்லைப் போல் தெரிகின்றது. கட்சித் தலைவர் தேர்வில் போட்டி இல்லாமல் ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்குக் கூட மாவை சேனாதிராஜா போன்ற தலைவர்களினால் இயலாது என்றே தோன்றுகின்றது என்றார் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் தலைவரான – விவரங்கள் நன்கு அறிந்த – அந்த மூத்த பிரமுகர். இத்தகைய போக்கு தமிழரசுக் கட்சியை நிரந்தரமாகப் பீடித்திருக்கும் பிணி என்றார் அந்தத் தலைவர்.

ஆனால் இயக்கங்கள் பற்றி நன்கு பட்டறிந்து உணர்ந்த என் நண்பர் ஒருவர் வேறு விதமாகக் கருத்துச் சொன்னார்.

“தமிழரசுக் கட்சிக்கு என்று மட்டுமல்ல, எல்லாத் தமிழ்க் கட்சிகளுக்குள்ளும் இயக்கங்களுக்குள்ளும் இதுதான் நிலைமை” என்றார் அவர்.

இரண்டாவது மட்டத் தலைவர்களுக்கு இடையில் வரும் போட்டிகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் இயக்கத் தலைமைகள் தீவிரம் காட்டாதமையே அந்தந்த இயக்கங்களின் பேரழிவுகளுக்குக் காரணமாக அமைந்தது என்பதை வரிசையாக பட்டியலிட்டார் அவர். அவற்றை நான் இன்று இங்கு விவரித்தால் அது புதிய சர்ச்சைகளை உருவாக்கி விடும். அதனால் விட்டு விடுகிறேன்.

அதே தவறைத்தான் மாவையரும் சம்பந்தனும் கூடச் செய்தார்கள், செய்கின்றார்கள் என்பதே உண்மை.

என்ன, இந்தப் போட்டியின் விளைவை தமிழரசு கட்சி எதிர்காலத்தில் சந்திக்க வேண்டி இருக்கும். அதுதான் கட்சியின் துரதிஷ்டம்...!

## தேசிய தேர்தல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:–

“அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் வெவ்வேறு இடங்களில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆனால், அவர்கள் எந்த மாதம் தேர்தல் நடைபெறும் என்று உறுதியாகக் கூறவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அந்தத் தேர்தல் இன்னமும் நடைபெறாமல் இருக்கின்றது. அந்த நிலைதான் ஜனாதிபதித் தேர்தலுக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கும் நடக்குமா என்ற ஐயம் எழுந்துள்ளது.

எனவே, வாயால் மாத்திரம் வாக்குறுதிகளை வழங்காமல் தேசிய தேர்தல்களை ஜனாதிபதி விரைந்து நடத்த வேண்டும்.” – என்றார்.



# போக்குவரத்துச் சபை தொடர்ந்து நட்டத்தில் இயங்குமானால் தனியார் மயப்படுத்தப்படுமாம்

## எச்சரிக்கின்றார் அமைச்சர் பந்துல குணவர்தன



இலங்கைப் போக்குவரத்துச் சபை தொடர்ந்து நட்டத்தில் இயங்கினால் தனியார் மயப்படுத்தப்படும் அபாயம் உள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான நியமனக் கடிதங்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் வழங்கிவைக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் –

“உலகின் பல நாடுகளில் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளுக்குப் பணம் கொடுக்க வேண்டியுள்ளது. இலங்கையில் இலவச சுகாதார வசதிகள், கல்வி போன்றவற்றுக்கு மக்களின் பெரும் தொகையான வரி செலவிடப்படுகிறது.

எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு எந்தவொரு அரச நிறுவனத்திற்கும் அரசு ஆள்சேர்ப்புகளைச் செய்யாது. அரச ஊழியர் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் மானியங்களை வழங்க அதிகமான நிதியை செலவிட வேண்டியுள்ளது.

எவர் ஆட்சியை நடத்தினாலும் வரிப் பணத்தில் இந்த இரண்டு பணிகளை மட்டுமே செய்ய முடியும். நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டி செலுத்தப்படுகிறது. வீதிகள் மற்றும் இதர அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட மூலதனச் செலவுகள் கடன் பெற்று ஈடுசெய்யப்பட்டுள்ளன.

சுதந்திரத்திற்குப் பிறகு, ஒவ்வொரு அரசாங்கமும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன்களைப் பெற்றுள்ளன.

அரசியல் ரீதியாக மிகவும் வளர்ச்சியடையாத கருத்தை இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடம் விதைப்பதன் மூலம் நாட்டின் நெருக்கடியின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

இதனால் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மூட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இலங்கை போக்குவரத்து சபை 2024ஆம் ஆண்டுக்குள் இலாபம் ஈட்டாவிட்டால் தனியார் மயமாகும் அபாயம் உள்ளது.

தற்போதைய நிலைவரப்படி பணத் தட்டுப்பாடு இருந்தாலும் அச்சிடுவதற்கு சட்டப்படி அதிகாரம் இல்லை. எனவே, பழைய பழக்கவழக்கங்களையும், பழைய முறையையும் கடைப்பிடிக்க முடியாது.

எதிர்வரும் ஆண்டில் பல டிஜிட்டல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை போக்குவரத்து சபை செயற்பட்டு வருகின்றது. புதிய நியமனங்களைப் பெறும் அனைவரும் எதிர்காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையை அந்த இடத்திற்கு அழைத்துச் செல்வதில் உறுதியாக இருக்க வேண்டும்.” – என்றார்.



# வெலிப்பன்னவில் காணாமல் போன யுவதி 3 நாள்களில் சடலமாக மீட்பு!

வெலிப்பன்ன பகுதியில் கடந்த 27ஆம் திகதி காணாமல் போயிருந்த இளம் யுவதி ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிப்பன்ன, ஹிஜ்ரா மாவத்தையைச் சேர்ந்த 24 வயதுடைய மொஹமட் அமீன் பாத்திமா அஸ்மியா 27ஆம் திகதி வீட்டில் இருந்து காணாமல் போயிருந்த நிலையில் பிரதேசவாசிகளால் சடலமாக மீட்கப்பட்டார் என வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிப்பன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூனா மல்வத்தை பகுதிக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் ஆற்றின் கரையில் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும், அந்த இடத்திற்கு செல்வது மிகவும் கடினமாக இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிப்பன்னவில் இருந்து சில கிலோமீற்றர் தூரத்தில் கடினமான இடத்தில் இருந்து பிரதேசவாசிகளும் பொலிஸாரும் படகுகள் மூலம் சடலத்தை கொண்டு வந்தனர்.

சடலம் இருந்த இடத்திற்கு படகில் வந்த வெலிப்பன்ன மரண விசாரணை அதிகாரி நிஹால் ஜயநெதி சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை நாகொட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.




## மதுரங்குளி குளத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சாமர பிய கெலும் (வயது 43) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி – முருகன் கோயிலுக்குப் பின் பக்கமாக உள்ள சிறிய குளத்தில் சடலமொன்று மிதப்பதாகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கு முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த முந்தல் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி, அங்கு மரண விசாரணையை மேற்கொண்டார்.

அத்துடன் அந்தச் சடலம் புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

இதன்போது உயிரிழந்த நபரின் உடல் அவயங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டு, திறந்த தீர்ப்பு வழங்கி சடலம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போதகர் ஜெரோம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைய வாக்கு மூலம் வழங்குவதற்காக மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நேற்று முற்பகல் 9.20 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார். அவர் மாலை 5 மணியளவில் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

ஜெரோம் பெர்ணான்டோ நாடு திரும்பும் போது அவரைக் கைது செய்ய வேண்டாம் எனவும், அவர் இலங்கை வந்ததும் 48 மணி நேரத்துக்குள் அவரிடம் வாக்கு மூலம் பெறுமாறும் சி.ஐ.டிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னதாக உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, வெளிநாட்டில் தங்கியிருந்த மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, நேற்றுமுன்தினம் காலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கொழும்பில் கடந்த மே மாதம் வழங்கிய போதனையின் போது, பிற மதங்கள் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டார் என்று போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் விலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 356 ரூபாவாக இருந்த நிலையில், புதிய விலை திருத்தத்துக்கு அமைய 346 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 423 ரூபாவாக இருந்த நிலையில், புதிய விலை திருத்தத்துக்கு அமைய 426 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 27 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 356 ரூபாவாக இருந்த நிலையில், புதிய விலை திருத்தத்துக்கு அமைய 329 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 431 ரூபாவாக இருந்த நிலையில், புதிய விலை திருத்தத்துக்கு அமைய 434 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 249 ரூபாவாக இருந்த நிலையில், புதிய விலை திருத்தத்துக்கு அமைய 247 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## ரொஷானுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு குறித்து ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யவே இந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து ஒன்றின் மூலம் நீதிமன்றத்தை அவமதித்தார் என்று சட்டத்தரணி ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிரதிவாதி ரொஷான் ரணசிங்கவுக்கு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, இந்த மனுவை எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை முன்வைத்தார் என்று குறித்த சட்டத்தரணி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தடுப்போம் எய்ட்ஸை!

இன்று டிசம்பர் முதலாம் திகதி. உலக எய்ட்ஸ் தினம்.

எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுவதால் ஏற்படும் உயிர்கொல்லி நோயான எய்ட்ஸ் குறித்து உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அதன் மோசமான பிடியிலிருந்து மனித குலத்தை விடுவிப்பதற்காக அறிவிக்கப்பட்ட நாள் இது. கடந்த 35 ஆண்டுகளாக - 1988 ஆம் ஆண்டு முதல் - இந்தத் தினம் சர்வதேச ரீதியில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

உலகில் உள்ள மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இந்த எச்.ஐ.வி. வைரஸுக்கு எதிராக ஒரு முகமாகப் போராடவும் -

எச்.ஐ.வி. வைரஸுடன் வாழ்ந்து வரும் மக்களுக்கு உலகத்தின் இரக்கத்தையும் ஆதரவையும் வெளிப்படுத்தவும் -

எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தவும் -

இந்த நாளை உலகம் பயன்படுத்திக் கொள்கிறது.

உலகளாவிய ரீதியில் தீவிரமான உடல் பாதிப்புகளைக் கொடுக்கும் நோயாகக் கணிக்கப்படும் இதன் தொற்றுக்கு வருடம் தோறும் லட்சக்கணக்கானோர் புதிது புதிதாக ஆளாகின்றனர். லட்சக் கணக்கானோர் ஆண்டுதோறும் இந்த நோய்க்குப் பலியாகின்றனர்.

இந்த வருடம் எயிட்ஸ் தினத்தை ஒட்டிய வாசகம் 'சமூகங்கள் முன்னிலை வகிக்கட்டும்' (Let communities lead) என்பதாகும். எய்ட்ஸ் பாதிப்பை எதிர்கொண்டோரை ஆதரித்துத் தாங்கும் பொறுப்பை சமுதாயம் ஏற்று முன்னிலை வகிக்கட்டும் என்பது இதன் உட்பொருள்.

சர்வதேசத்தில் முன்னிலைப்படுத்தப்படும் இந்த உணர்வை இலங்கை உள்வாங்கி, தன்னை நெறிப்படுத்தியுள்ளதா என்பதுதான் கேள்வி.

பூகோளமயமாதலின் ஒரு பங்காக உலகம் சுருங்கி வருகின்றது. பூமிப் பெரும்பந்து இப்போது இந்தத் தொடர்பாடல்களினால் பூகோளக் கிராமமாகச் சுருங்கி விட்டது. அதனால் உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் ஒரு சிறிய நிகழ்வின் பிரதிபலிப்பை, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு சிறு தீவு நாட்டின் மக்களாகிய இலங்கையரும் அடுத்த கணத்தில் எதிர்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது.

இந்த அதிவேக ஆட்படுத்தல் எய்ட்ஸ் போன்ற மனித உயிர்க்கொல்லி நோயின் பரம்பலுக்கும் விதிவிலக்கல்ல.

இந்த உயிர்கொல்லி நோயின் தாக்கத்தை உலகில் மற்ற நாடுகளைப் போல - குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகளைப் போல - இலங்கையும் எதிர்கொண்டு நிற்கின்றது.

ஆனால், அந்தக் கொடிய நோயின் தொற்றை - பரவலை - நமது சமூகத்தின் மத்தியில் அண்ட விடாமல் தடுப்பதற்கான பிரசார முயற்சிகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள், தடுப்பு நடவடிக்கைகள் நமது நாட்டில் திருப்தி தரும் விதத்தில் முன்னெடுக்கப்படவில்லை என்பதுதான் கள யதார்த்தமாக இருக்கின்றது.

ஐ.நா. வரை உலக சுகாதார கட்டமைப்புகள், பொது நிதியங்கள், நிறுவனங்கள் இந்த ஆட்கொல்லி நோயின் தொற்றைக் கட்டுப்படுத்தல், பரவலைத் தடுத்தல், பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளித்தல், இந்நோயினால் நலிவுற்ற சமூகத்தைத் தாங்கிப் பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு அள்ளிக் கொடுத்து உதவுகின்றன.

எனினும் கூட, திருப்பி தரக்கூடிய விதத்தில் பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் களத்தில் இல்லை என்பதுதான் யதார்த்தம்.

இந்த ஆபத்தான நோயின் தீங்குகளைப் புரிந்து கொள்ளாமலேயே 'விளக்கில் வீழும் விட்டில் பூச்சிகள் போல' நமது சமூகத்தின் கணிசமான பிரிவினர் பொறுப்பின்றிச் செயற்பட்டு, இந்த ஆட்கொல்லிக்கு இடமளித்து நிற்கின்றமை வேதனையிலும் வேதனை.

இந்நோய்ப் பரம்பல் தொடர்பான இலங்கையின் புள்ளிவிவரங்கள் திருப்தி தருவனவாக இல்லை என்பதுதான் அதிர்ச்சியளிக்கும் உண்மை.

# இலங்கையர் உட்பட இரண்டு பேர் 4 கிலோ தங்கத் தூளுடன் கைது!

## மும்பை விமான நிலையத்தில் சிக்கினர்

இந்தியப் பணத்தில் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான 4 கிலோ தங்கத் தூளை சட்டவிரோதமான முறையில் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் இலங்கையர் உட்பட இரு இளைஞர்கள் மும்பை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்கச் சட்டத்தின் கீழ், இலங்கையைச் சேர்ந்த முகமது ஜலீல் என்ற 35 வயதுடையவரையும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 38 வயதான முகமது உசேன் என்பவரையும் வருவாய் புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.

கொழும்பில் இருந்து சென்ற இந்த இரண்டு பயணிகள் தொடர்பில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததால், சந்தேகத்தின் பேரில் இருவரையும் சோதனையிட்டதில், மெழுகு வடிவில் இருந்த 4 கிலோ தங்கத் தூள் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விசாரணையின் போது ஹுசைன் என்ற நபரே தங்கத்தை தனக்கு வழங்கினார் என இலங்கையர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட எட்டு கிலோ கிராம் தங்கம் பாம்பன் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளராக கனகேஸ்வரன்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிச.01

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக க.கனகேஸ்வரன் நேற்று வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பணியாற்றிய க.கனகேஸ்வரன் நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு தேர்வான நிலையில் வடக்கு மாகாண சபைக்கு மாற்றலாகினார்.



இவ்வாறு வடக்கு மாகாண சபைக்கு நியமிக்கப்பட்ட கனகேஸ்வரன் இன்று முதல் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக வடக்கு மாகாண ஆளுநர் எம்.எஸ்.சார்ள்ஸினால் நியமிக்கப்பட்ட நிலையில் இன்று தனது கடமையை பொறுப்பேற்கவுள்ளார்.




## உலக எய்ட்ஸ் தினம் இன்று டிசம்பர் 01

# வரும் முன்காப்பதே சாலச் சிறந்தது

**வைத்தியர் ஏ.ரொஹா**
(பாலியல் நோய்த் தடுப்பு
சிகிச்சைப் பிரிவு, யாழ்ப்பாணம்)

21 -ஆம் நூற்றாண்டில் எய்ட்ஸ் பற்றி தெரியாதவர்களே இல்லை என்று கூறலாம். சின்ன குழந்தை கூட எய்ட்ஸ் என்ற வார்த்தையை கற்று வைக்கும் அளவிற்கு இன்று உலகம் முழுவதும் அது பிரபலமாகி இருக்கிறது. பத்திரிக்கைகள், டி.வி, சினிமா, அரசாங்க அலுவலகங்களில், நடைபாதையில் எங்கு பார்த்தாலும் எய்ட்ஸ் பற்றிய விளம்பரங்களை நாம் பார்க்கலாம். அந்த அளவிற்கு இந்த உலகையே ஆட்டி படைக்கும் பேயாக இந்த எய்ட்ஸ் விளங்குகிறது.

எய்ட்ஸ் என்றால் என்ன என்பது தெரியவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும். எய்ட்ஸ் பிரச்சினைக்குரிய, உயிரை குடிக்கக் கூடிய நோய் என்று எல்லோரும் தெரிந்து இருக்கிறார்கள். ஆனால் , அந்நோய் எவ்வாறு ஒருவரை தாக்கும் என்பதில் அதிக விழிப்புணர்வு அற்று இருக்கிறார்கள்.

ஒவ்வொரு வருட டிசம்பர் முதலாம் தேதிகதி 'உலக எய்ட்ஸ் தினம்' ஆக கடைபிடிக்கப்படுகிறது.

### எய்ட்ஸ்க்கு சிகிச்சை உண்டா? இல்லையா?

மருந்து உண்டு என்ற போலி விளம்பரத்தால் சொத்தை அழிக்காதீர்கள் ஆனால் நோய்யைக் கட்டுப்படுத்தலாம்.

தடுப்பு மருந்து இல்லை. குணப்படுத்த மருந்து கிடையாது. முடிவு மரணமே!

### எய்ட்ஸ் என்றால் என்ன?

பல்வேறு நோய்கள் தாக்கப்பட்ட ஒருவருக்கு, அவருடைய உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்கியிருப்பதை மருத்துவ பரிசோதனை உறுதி செய்யும் பரிதாபகரமான நிலை தான் எய்ட்ஸ்.


எச்.ஐ.வி. எனும் வைரஸால்தான் எய்ட்ஸ் ஏற்படுகிறது. இது மனிதர்களின் இயற்கையான நோய் எதிர்ப்புத் தன்மையில் நிரந்தரப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஒருவர் எச்.ஐ.வியுடன் பல ஆண்டுகாலம் வாழ முடியும். ஆனால், அவர் உடல் நோய்களை இழக்கும் தன்மையைப் பெறும் போதுதான் எய்ட்ஸ் நோயாளியாகிறார். ஓர் ஆண்டுக்குள் அவருக்கு ஏராளமான நோய்கள் ஒன்றன் பின் ஒன்றாக தொற்றிக் கொள்ளும் நிலை அவருக்கு ஏற்படுகிறது.

### எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸீக்கும் உள்ள வேறுபாடு என்ன?

எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எச்.ஐ.வி. இருக்கும். ஆனால் எச்.ஐ.வி. தாக்கப்பட்ட அனைவரும் எய்ட்ஸ் நோயாளி என்று கூறிவிட முடியாது. ஆனால், எச்.ஐ.வி தொற்று உள்ளவர்கள் அனைவரும் எய்ட்ஸ் நோயாளியாக மாறுகிறார்கள். எச்.ஐ.வி பாதுகாப்பற்ற உடலுறவு, பரிசோதனை செய்யப்படாத ரத்தம் மற்றும் எய்ட்ஸ் நோயாளித் தாயிடமிருந்து குழந்தைகளுக்கு ஆகிய மூன்று முக்கிய வழிகளில் எய்ட்ஸ் தற்போது பரவிவருகிறது.






எச்.ஐ.வி யால் தாக்கப்பட்டவர் 3 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டு வரை அந்நோய்க்கான அறிகுறிகள் பற்றி தெரியாமலேயே வாழ்வார். அதே சமயம் அவர் எய்ட்ஸ் நோய்க்குரிய அறிகுறிகள் தென்படும்போதுதான் அவருக்குள் மறைந்திருந்த ஆபத்தை உணர முடியும்.

### யாருக்கு எய்ட்ஸ் வரும்?

உலகில் எய்ட்ஸ் ராக்கெட் வேகத்தில் பரவி வருகிறது. எச்.ஐ.வி தொற்று உள்ளவருடன் பாதுகாப்பற்ற உடல் உறவு கொள்வோருக்கு இந்த எச்.ஐ.வி. தொற்றி விடுகிறது.

80 சதவீத எய்ட்ஸீக்கு காரணம் பாதுகாப்பற்ற உடல் உறவுதான். 25 வயதுக்குள் உள்ள இளைஞர்களுக்குத்தான் எய்ட்ஸ் அதிகமாக பரவுகிறது. அதற்கு காரணம் அந்த வயதில் அவர்கள் பாலுறவில் அதிக நாட்டமிக்கவராக இருப்பதால் பாதுகாப்பான உடல் உறவை மறந்து விடுகிறார்கள். "நீங்கள் எப்படி பட்டவராக இருந்தாலும், எங்கு வாழ்கிறவராக இருந்தாலும் எச்.ஐ.வி தொற்று பற்றிய விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்" என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் யுனிசெவ் கூட்டாக வெளியிட்டுள்ள கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எச்.ஐ.வி. தொற்றுக்கு ஏதாவது அறிகுறி உள்ளதா?

எச்.ஐ.வி. தொற்றியவுடன் எந்த அறிகுறியும் இருக்காது. அவர் மற்றவர்களைப் போலவே சாதாரணமாகவே தனது வாழ்க்கையின் கடமைகள்

தொடர்ச்சி ▼

# வரும் முன்காப்பதே சாலச் சிறந்தது

தொடர்ச்சி ▲

அத்தனையும் நிறைவேற்றிக் கொண்டிருப்பார். இந்த காலகட்டத்தில் சிறுசிறு நோய்கள் (நோய் தாக்குதல்களுக்கு ஆளாகாதோரைப் போலவே) வந்து போகும்.

இது எல்லோருக்கும் வரும் நோய்தானே என்பதால் எச்.ஐ.வியால் தாக்கப்பட்டவருக்கு தான் இந்நோயால் தாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிய மாட்டார்.

எச்.ஐ.வி யால் தாக்கப்பட்டிருப்பதை ரத்தப் பரிசோதனை மூலம்தான் உறுதி செய்ய முடியும். (சந்தேகம் உள்ளவர்களுக்கு இலவச ஆலோசனை.)



### எய்ட்ஸ் எப்படி பரவுகிறது?

எய்ட்ஸ் பரவ காரணமான எச்.ஐ.வி. கிருமி மூன்று வழிகளில் பரவுகிறது. என்றாலும் கூட, பாதுகாப்பற்ற உடல் உறவுதான் இன்று இந்த உலகில் ஏராளமானோருக்கு நோய்த் தொற்றை ஏற்படுத்தியிருக்கிறது.

1. பாதுகாப்பற்ற உடல் உறவு (ஆசன வாய் மற்றும் பெண் உறுப்பு வழியாக புணர்தல்).
2. பரிசோதனை செய்யப்படாத எச்.ஐ.வி. தொற்றுள்ள இரத்தத்தை ஏற்றுவது. பயன்படுத்திய ஊசிகளை மீண்டும் பயன்படுத்தும் போது.
3. கருவுறும் முன் அல்லது கருவுற்ற நிலையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகும் பெண்ணின் சிசுவுக்கு எச்.ஐ.வி. தொற்று பரவ வாய்ப்பு.

### பால்வினை நோய்கள் என்றால் என்ன?

பால்வினை நோய் தொற்றியவருடன் உடல் உறவு கொள்ளும் போது பரவுவதுதான் பால்வினை நோய்கள் (எஸ்.டி.டி). பால்வினை நோய்களில் குனோரியா எனப்படும் வெட்டை நோய், சிபிலிஸ் எனும் மேக நோய், படை உள்ளிட்ட நோய்கள் தான் அவை. இவற்றை கண்டறிந்து குணப்படுத்த முடியும்.

இந்த நோய்களைக் கண்டறியாமல் விடும் போது எளிதில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படலாம். பால்வினை நோய்கள் இனப்பெருக்க உறுப்புகளில் புண்கள் குறிப்பாக பெண்களுக்கு, ரத்தக்கசிவு உள்ள படை, தோல் கீறல்களால் எச்.ஐ.வி. நுழைய கதவுகளை திறக்கின்றன.

### எய்ட்ஸ் எப்படி பரவாது?

1. சாதாரணமாக சமூக பழக்கவழக்கங்களின் மூலம் பரவாது.
2. கைகுலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல் மற்றும் முத்தம் மூலம் பரவாது.
3. பொதுக்கழிப்பறைகள் மற்றும் படுக்கை மற்றும் அவர்கள் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள் மூலம் பரவாது.
4. நீச்சல் குளம் மூலம் மற்றும் சலூன் கடைகள் மூலம் பரவாது.
5. ஒவ்வொரு முறையும் துய்மையாக்கப்பட்ட உபகரணங்கள் மூலம் இரத்த தானம்.
6. இருமல், தும்மல் மற்றும் கொசுக்கடி மூலம் பரவாது.



### எய்ட்ஸ் பரவாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

இதுவரை எய்ட்ஸை குணமாக்க எந்த மருந்தும் கண்டறியாத போது, நாம் கவனமுடன் நடந்து கொள்வதன் மூலம்தான் அதை தடுக்க முடியும். பொறுப்புடனும் பாதுகாப்புடனும் நடந்து கொண்டால் இந்த நோயை விரட்ட முடியும்.

எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர் அதுபற்றி தெரியாமலே அந்நோயை பரப்பிக் கொண்டிருப்பதால் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பள்ளிகளில் எய்ட்ஸ் பற்றி பேச எல்லோராலும் முடிவதில்லை. எய்ட்ஸ் பற்றி எல்லோருடனும் பேசுங்கள். உங்களுக்கு தெரிந்தவை பற்றி குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் கலந்து பேசுங்கள் (தமிழக பள்ளி மாணவர்கள் அடிக்கடி எழுப்பிய கேள்விகளின் முதல் இன்டர்நெட் தொகுப்பை பார்க்க கிளிக் செய்க.)

- எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும்.
- உங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் பெற்ற தகவல்களை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்.

### எச்.ஐ.வியை விலை கொடுத்து வாங்கலாமா?

- பாதுகாப்பற்ற முறையில் ஒருவர் பலருடன் உடலுறவு கொள்தல்.
- பலருடன் உறவு கொள்பவருடன் பாதுகாப்பற்ற உடலுறவு.
- பயன்படுத்திய ஊசிகளை சுத்தப்படுத்தாமல் மீண்டும் பயன்படுத்துவது.
- பரிசோதனை செய்யாத இரத்தத்தைப் பெற்றுக் கொள்தல்.

### பொறுப்பான உடலுறவு பழக்கங்கள்

1. திருமணத்துக்கு முன்பு உடலுறவு கொள்வதைத் தவிர்த்து விடுங்கள். அன்பையும் காதலையும் உணர்த்த உடலுறவுதான் ஒரே வழி அல்ல.
2. எச்.ஐ.வி. தொற்று இல்லாத இருவர் உடலுறவு கொள்வதால் இருவரும் பாதுகாப்பு பெறுகின்றனர். எச்.ஐ.வி. தொற்று அபாயமும் இல்லை.
3. தெரியாத புதியவருடன் உடலுறவு கொள்தல்

தொடர்ச்சி ▼



# வரும் முன்காப்பதே சாலச் சிறந்தது

தொடர்ச்சி ▲

அல்லது பாலுறவு தொழிலாளருடன் உடலுறவு கொள்ளும் ஒவ்வொரு முறையும் ஆணுறை அணிவது ஓரளவுக்கு எச்.ஐ.வி. தொற்று மற்றும் பால்வினை நோய்கள் பரவாமல் பாதுகாக்கும்.

### ஊசிகள்

4. ஒரு முறை பயன்படுத்தக்கூடிய ஊசிகளை பயன்படுத்த வேண்டும். பயன்படுத்திய ஊசிகளை ஸ்டெர்லைஸ் செய்ய வேண்டும்.
5. மருத்துவரால் பரிந்துரைக்காதவற்றை ஊசியால் ஏற்றிக் கொள்ளாதீர்கள்.
6. நீங்கள் எவ்வளவு பாதுகாப்பானவராக தெரிந்தாலும் கூட, நீங்கள் போட்டுக் கொண்ட ஊசியை மற்றவருக்கு அனுமதிக்காதீர்கள்.

### ரத்தம்

நோயாளிக்கு ஏற்றப்படும் ரத்தம் பரிசோதிக்கப்பட்டதுதானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

### உங்களுக்கு தெரியுமா?

உலகில் ஒரு மணி நேரத்தில் 600 நபர்கள் எச்.ஐ.வியால் பதிக்கப்படுகிறார்கள்.

உலகில் ஒரு நிமிடத்தில் ஒரு குழந்தை எய்ட்ஸ் மூலம் இறக்கிறது.

கர்ப்பிணிப் பெண்களிடமிருந்து பிறக்கப் போகும் குழந்தைக்கு எச்.ஐ.வி. கிருமி பரவுவதைத் தடுக்க முடியும். கர்ப்பிணிப் பெண்களிடமிருந்து பிறக்கப்போகும் குழந்தைக்கு எச்.ஐ.வி. கிருமி பரவுவதைத் தடுக்க வசதி தற்பொழுது அனைத்து மருத்துவ கல்லூரி மருத்துவ மனையிலும், மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

### எய்ட்ஸ் தெரிந்து கொள்ள வழி:

இரத்த பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

### எய்ட்ஸ் நோய்யின் அறிகுறிகள்:

எச்.ஐ.வி நுண்கிருமியால் உடல் பலமற்றதாகி விட்ட நிலையில் ஏற்படுகின்ற நோயின் பிரதிபலிப்புதான் எய்ட்ஸ் ஆகும்.

தொடர்ந்து சளி, இரும்பல், காய்ச்சல் வரும்.

தொடர்ந்து வாய்ப்புண் மற்றும் வயிற்றுப் போக்கு இருக்கும்.

தோலில் தடிப்பு ஏற்படும்.

எப்பொழுதும் அசதியாகவும், களைப்பாகவும் இருக்கும்.

நாளடைவில் எடை குறைந்து கொண்டே போகும்.

### எய்ட்ஸ் வந்து விட்டால் மனம் தளராதீர்கள்

தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அமைதியாக வாழப் பழகிக் கொள்ளுங்கள். மிகுந்த ஓய்வு எடுங்கள். சத்துள்ள கீழ் கண்ட உணவை உண்ணுங்கள்:–

**உடலை வளர்க்கும் உணவுகள்:** பட்டாணி, மொச்சை, சோயா, வேர்கடலை, எல்ல பழங்கள், கீரை, காய்கறிகள், முட்டை, இறைச்சி, மீன், பால்.

**சக்தியளிக்கும் உணவுகள்:** உருளைக் கிழங்கு, அரிசி, தானியம்.

**விழித்திரு. தனித்திரு. அணிந்திரு!**



# கோட்டாவின் தவறான பொருளாதாரக் கொள்கையால் வீதி அபிவிருத்திக்குரிய நிதி உதவிகளை இழந்தோம்!

## நாடாளுமன்றில் சாணக்கியன் காட்டம்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் முறையற்ற பொருளாதாரக் கொள்கையின் காரணமாகவே நாட்டில் வீதி அபிவிருத்திக்கென வழங்கப்படவிருந்த நிதிகள் நிறுத்தி வைக்கப்பட்டன என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் –

“நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வீதி அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்றவற்றினூடாக சிபாரிசு செய்யப்பட்ட iProject இற்கான வெளிநாட்டு நிதியானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ்வின் முறையற்ற பொருளாதாரக் கொள்கையின் காரணமாகவே கிடைக்கப் பெறவில்லை.

இதற்குக் காரணம் கோட்டாபய மாத்திரம் அல்லர். கோட்டாபயவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவு திட்டத்திற்கு வாக்களித்த அனைவரும்தான் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

எனவே, மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமைக்குகாரணம்இந்தவீசழதநஉவசெயற்படுத்தப்படாமையே ஆகும்.

நல்லாட்சிஅரசாங்கத்துடன்இணைந்து வரவு – செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்து நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைப்பு செய்யப்படாத வீதிகளுக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே பொறுப்புக்கூற வேண்டும்.

தேசிய ரீதியில் ரயில், பஸ் என்பன இணைந்த சேவையாக போக்குவரத்து திட்டமிடல் அமையவேண்டும்.


மகிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சிக் காலத்தில் தேசிய கொள்கை இல்லாமையின் காரணமாக அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட விமான நிலையம், அதிவேக நெடுஞ்சாலை, அதிவேக ரயில்வேப் போக்குவரத்து என்பன அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டமையினால் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு முறையான போக்குவரத்து வசதிகள் கிட்டாமல் போயிற்று.

குருணாகல் மாவட்டத்தில் நாமல் ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்ட போதும் குருணாகல் மாவட்டத்தில் ஒரு அதிவேக நெடுஞ்சாலையினைக் கூட அமைக்கவில்லை.

தற்போது ரயில் சேவைகளுக்கு மாத்திரமே பயண உத்தரவுச் சீட்டு (Warrant) வழங்கப்படுகின்றது. அதனை பஸ் சேவைகளுக்கும் மிக விரைவில் ஏற்படுத்தி தர வேண்டும்.

பாதுகாப்பற்ற ரயில்வேக் கடவைகள் புனரமைக்கப்பட்டு அதில் பணி புரியும் ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்றுதல் வேண்டும்.

அத்துடன் இங்கு பணிபுரிந்து ஓய்வடைந்தவர்களுக்கும் உரிய நேரத்தில் ஓய்வூதியம் வழங்கப்படல் வேண்டும். – எனத் தெரிவித்தார்.



# தொழில்நுட்பக் கண்காட்சி ஆரம்பம்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களின் தொழில்நுட்பக் கண்காட்சி நேற்றைய தினம் ஆரம்பமானது.

ரெக்டோபியா (Tectopia) - 2023 எனும் தொனிப்பொருளில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமான கண்காட்சி இன்றைய தினமும் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சியை நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

இக் கண்காட்சியை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை பார்வையிடலாம் எனவும் ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் ஒன்பது பிரிவுகளின் கீழ் புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# வீதி அமைப்பதையே முதன்மைப் பணியாக முன்னெடுத்தமையால் நாட்டுக்கு இந்தக் கதி

## ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு





பாதைகளை அமைப்பதை மாத்திரமே முதன்மை பணியாக சில அரசாங்கங்கள் கொண்டிருந்தமையின் காரணமாகவே நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“எனது நாடு கடனில் மூழ்க முறையற்ற சில அபிவிருத்தித் திட்டங்கள் தான் காரணமாகும். மக்களின் தேவைக்கு அல்லாது அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரின் தேவைக்கே நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்று கடந்த காலங்களில் அபிவிருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தன்னிச்சையாக வீதிகளை நிர்மாணித்தன் காரணமாக நாடு வங்குரோத்து நிலைக்கு செல்லும் பாதை உருவானது. சில பாதைகளால் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை.

உலகின் வளர்ந்த நாடுகளைப் போல அதிவேக பாதைகளில் உள்ள பற்றுச் சீட்டு வழங்கும் சாவடிகளில் மாற்றுத்திறனாளிகளை பணிக்கு அமர்த்த வேண்டும். – என்றும் அவர் கூறினார்.






# மிக நீள தலைமுடிக்கான சாதனை உத்தரப் பிரதேச யுவதி எட்டினார்!

உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பெண், உலகிலேயே மிக நீளமான தலைமுடிக்கு சொந்தக்காரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் ஸ்மிதா ஸ்ரீவஸ்தவா (வயது 46). சிறு வயது முதலே தலைமுடி வளர்ப்பதில் ஆர்வம் கொண்ட இவர், முடியை பராமரிப்பதற்கு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார்.

சிறுவயதில் குழந்தைகளுக்கு முடியை வெட்டி விடுவார்கள். அதன்படி ஸ்மிதாவுக்கும் சிறு வயதில் முடியை வெட்டி விட்டுள்ளனர். ஆனால், 14 வயதுக்கு பிறகு தனது தலைமுடியை வெட்டுவதைத் தவிர்த்தார். இதனால் அவரது முடி தொடர்ந்து வளர்ந்து தற்போது 7 அடி மற்றும் 9 அங்குலம் உள்ளது. இதன்மூலம் உலகின் நீளமான தலைமுடியை கொண்ட பெண் என்ற கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

1980களில் இந்தி நடிகைகள் நீளமான முடி அலங்காரம் செய்திருப்பார்கள். அவர்களால் ஈர்க்கப்பட்டு தலைமுடியை வளர்க்கத் தொடங்கிய ஸ்மிதா, இப்போது நீண்ட தலைமுடிக்காக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

பெண்களுக்கு அழகே நீண்ட தலைமுடிதான் எனக் கூறும் ஸ்மிதா, வாரத்திற்கு 2 நாள்கள் தலைமுடியை வோஷ் செய்வதாக தெரிவித்தார். முடியை வோஷ் செய்தல், உலர்த்துதல், சிக்கல் எடுத்தல் மற்றும் ஸ்டைலாக பின்னுதல் என இந்த நடைமுறையை செய்து முடிக்க கிட்டத்தட்ட 3 மணி நேரம் ஆகிறதாம்.

# தாயின் சடலத்துடனேயே வீட்டில் ஒரு வருடம் வாழ்ந்த 2 மகள்மார்!

## வாரணாசியில் நடந்த சம்பவம்





வாரணாசி,டிசெ.01

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள மதர்வா பகுதியைச் சேர்ந்தவர் உஷா திரிபாதி (வயது 52). உஷா அவரது மகள்களான பல்லவி திரிபாதி (வயது 27), வைஷ்விக் திரிபாதி (வயது 18) ஆகியோருடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த உஷா கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் உயிரிழந்தார். உஷாவின் கணவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அவர்களைப் பிரிந்து வீட்டை விட்டு வெளியேறி விட்டார். தனது மனைவி இறந்த பின்பும் மகள்களை பார்ப்பதற்காக அவர் வீட்டிற்கு வரவில்லை.

இதற்கிடையே, தாய் இறந்த சோகத்தில் இருந்து வெளிவராத மகள்கள், தாயின் உடலுக்கு இறுதியாக செய்யும் எந்த ஒரு சடங்கையும் செய்யாமல், உடலை வீட்டின் ஓர் அறையில் வைத்திருந்தனர்.

கடந்த சில தினங்களாக இருவரும் வீட்டை விட்டு வெளியே வராததால், கதவு மூடியே இருந்தது. அக்கம் பக்கத்தினருக்கு சந்தேகம் ஏற்பட்டதால் கதவைத் தட்டினர். கதவுகள் திறக்கப்படாததால், பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

தகவலின் பேரில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்தனர். வீட்டின் கதவை பொலிஸார் தட்டியும் திறக்காத நிலையில், பொலிஸார் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு ஓர் அறையில் சடலம் கிடந்தது. இரண்டு மகள்களும் வேறு ஓர் அறையில் ஒன்றாக அமர்ந்திருந்தனர். அவர்களை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காற்று மாசால் வருடாந்த உயிரிழப்பு எண்ணிக்கை

# சீனாவில் 24.4 லட்சம் இந்தியாவில் 21.8 லட்சம்!

## மருத்துவ ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

திறந்தவெளிக் காற்று மாசுபாட்டால், இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 21 லட்சத்து 80 ஆயிரம் மக்கள் உயிரிழக்கின்றனர் என மருத்துவ ஆய்வு இதழான பி.எம்.ஜே. மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு சீனாவில் மட்டும் 24 லட்சத்து 40 ஆயிரம் மக்கள் காற்று மாசால் உயிரிழந்துள்ளனர்.

தொழிற்சாலைகள், மின் ஆற்றல் உற்பத்தி மையங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் புதைபொருள் எரிபொருள்களால் (பெட்ரோல், டீசல் உள்ளிட்டவை) மட்டும் 50 லட்சம் பேர் உலகம் முழுவதும் உயிரிழக்கின்றனர் என இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

2019 இல் பெறப்பட்ட தரவுகளின் படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உலகம் முழுவதும் 83 லட்சம் பேர் காற்று மாசுபாட்டால் உயிரிழக்கின்றனர் எனவும், புதுப்பிக்க இயலாத எரிபொருள்கள் பயன்படுத்துவதால் உண்டாகும் காற்று மாசு என்பது 61 சதவீதம் உயிரிழப்புகளுக்குக் காரணமாக அமைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கையாக உருவாகும் காட்டுத் தீ, பாலைவன துகள்கள் ஆகியவற்றைத் தவிர்த்து மனிதர்களால் கண்டறியப்பட்ட எரிபொருள்கள் பயன்பாட்டைக் கட்டுபடுத்தினாலேயே 82 சதவீத உயிரிழப்புகளைத் தவிர்க்க இயலும் என இந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வில் ஜேர்மனியின் மேக்ஸ் பிளாங்க் வேதியியல் ஆய்வு நிறுவனத்தின் ஆய்வாளர்களும் இணைந்து பணியாற்றியுள்ளனர்.

திறந்தவெளிக் காற்று மாசால் இருதய நோய்கள், மாரடைப்பு, நாள்பட்ட நுரையீரல் நோய்கள் மற்றும் சர்க்கை நோய்- பெரும்பாலும் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

'பாரிஸ் சூழலியல் இலக்கு 2050' நோக்கிய பயணத்தில் நிச்சயமற்ற நிலை நீடிப்பினும், எரிபொருள் தேவைக்குத் தூய, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மையங்களைப் பயன்படுத்தப்படும் போது சுழலியல் பாதுகாப்போடு மனிதர்களின் உடல்நலத்திலும் பெரியளவில் மாற்றம் ஏற்படும் என ஆய்வாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

# 'உலகின் சோகமான' யானை பிலிப்பைன்ஸில் உயிரிழந்தது

## இலங்கை பரிசாக வழங்கியதாம்



மணிலா, டிசெ. 01

விலங்குகள் நல ஆர்வலர்களால் "உலகின் சோகமான" (World's 'saddest' elephant) யானை என பெயரிடப்பட்ட மாலி எனப்படும் யானை உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மாலி பிலிப்பைன்ஸில் உள்ள ஒரு மிருகக்காட்சிசாலையில் உயிரிழந்துள்ளது. அது தனது வாழ்நாளின் பெரும்பகுதியை தனியாகவே கழித்துள்ளதாம்.

"மணிலா" மிருகக்காட்சிசாலையில் நான்கு தசாப்தங்களாக இருந்து வரும் மாலியை மிகவும் நேசித்தவர்களிடமிருந்து அஞ்சலிகள் தொடர்ந்து குவிந்த வண்ணம் உள்ளன.

மாலியின் மரணம் குறித்து மணிலாவின் மேயர் பேஸ்புக் காணொலியில் அறிவித்துள்ளார். மாலியைப் பார்க்க மிருகக் காட்சிசாலைக்குச் சென்றது தனது மகிழ்ச்சியான குழந்தைப் பருவ நினைவுகளில் ஒன்றாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலி தனது தும்பிக்கையை சுவரில் தொடர்ந்து தேய்த்துக் கொண்டிருந்தது. வலியின் அறிகுறியாக இருப்பதாக மிருகக் காட்சிசாலையின் தலைமை கால்நடை மருத்துவர் ஹென்றிச் பேட்ரிக் பெனா-டோமிங்கோ வெளிநாட்டு ஊடகங்கள் முன் தெரிவித்துள்ளார்.

எனினும் 28 ஆம்திகதி யானையின் நிலைமை மிகவும் மோசமடைந்தது. அதிகமாக சுவாசிக்க சிரமமப்பட்டது. பின்னர் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டும், அன்று மதியம் பரிதாபமாக உயிரிழந்தது என்றார்.

மேலும், பிரேத பரிசோதனையில் அந்த யானைக்கு புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், தமனியில் அடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாலியின் முழுப் பெயர் விஷ்வ மாலி ஆகும். மாலி பிலிப்பைன்ஸின் முதல் பெண்மணி என அழைக்கப்படும் இமெல்டா மார்கோஸ்'க்கு 1981ஆம் ஆண்டு அது 11 மாத குழந்தையாக இருந்தபோது இலங்கை அரசால் அவருக்குப் பரிசாக வழங்கப்பட்டது.

மணிலா மிருகக்காட்சிசாலையில் 1977 ஆம் ஆண்டில் வந்த மற்றொரு யானை ஷிவா. 1990 ஆம் ஆண்டில் ஷிவா உயிரிழந்ததிலிருந்து மிருகக் காட்சிசாலையில் மாலி யானை மட்டுமே இருந்தது.

கொரோனா காலகட்டத்தில், மணிலா உயிரியல் பூங்கா குழந்தைகளுக்கான தடுப்பூசி மையமாக செயல்பட்டது. அங்கு மாலி அவர்களை மகிழ்விக்க தனது நேரத்தை செலவிட்டது குறிப்பிடத்தக்கது.

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் உள்ளூர் அரசியல் சக்திகளுக்குச் சம்பந்தம்

## நாட்டில் அரைவாசிக்கு மேற்பட்டோர் இப்படிக் கருத்து



இலங்கையில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உள்ளூர் அரசியல் சக்திகள் சம்பந்தப்பட்டிருந்தன என இலங்கை சனத்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நம்புகின்றனர் என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில் 53 வீதமானவர்கள் தாக்குதகளின் பின்னணியில் உள்ளூர் அரசியல் சக்திகள் சம்பந்தப்பட்டிருந்தன எனக் கூறியுள்ளனர்.

Syndicated Surveys இனால் கடந்த ஒக்டோபர் மாதம் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வெறிடே ரிசர்ச்சின் கூற்றுப்படி, கணக்கெடுக்கப்பட்டவர்களுக்கு, தாக்குதல்களுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பது குறித்து நாட்டில் நிலவும் பின்வரும் மூன்று தெரிவுகள் வழங்கப்பட்டன.

1) ஆபத்தான வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து செயற்படும் இலங்கை தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது.

2) உள்ளூர் அரசியல் சக்திகளுடன் இணைந்து செயற்படும் இலங்கைத் தீவிரவாதிகளால் இது மேற்கொள்ளப்பட்டது.

3) உள்ளூர் அரசியல் சக்திகளுடனும் ஆபத்தான வெளிநாட்டு சக்திகளுடனும் இணைந்து செயற்பட்ட இலங்கை தீவிரவாதிகளால் இது மேற்கொள்ளப்பட்டது.

இதிலிருந்து மிகவும் ஒப்புக்கொண்ட ஒன்றைத் தெரிவுசெய்யும்படி ஆய்வில் பங்கெடுத்தவர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்த ஆய்வின் முடிவில் 53 வீதமானவர்கள் உள்ளூர் அரசியல் சக்திகள் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

30 வீதம் பேர் இரண்டாவது பதிலையும், 23 வீதம் பேர் மூன்றாவது பதிலையும் தேர்ந்தெடுத்தனர். உள்ளூர் அரசியல் சக்திகளின் தலையீடு இல்லாமல் இது மேற்கொள்ளப்பட்டதாக எட்டு வீதம் மட்டுமே நம்பினர்.

39 வீதமானவர்கள் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டனர் எனக் கூறப்படுகின்றது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் மூன்று தேவாலயங்கள் மற்றும் மூன்று சொகுசு ஹோட்டல்களை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் மொத்தம் 269 பேர் உயிரிழந்தனர். 500க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து 2023 ஒக்டோபரில் ஆய்வு நடத்தப்பட்டதுடன், நாடு முழுவதும் உள்ள 1,029 பேரிடம், தேசிய பிரதிநிதித்துவ மாதிரி பதில்களின் அடிப்படையில் ஆய்வு நடத்தப்பட்டது.



# இன்றைய ராசி பலன்கள் - 01.12.2023

## மேஷம்

உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இன்று இலக்குகளை நிர்ணயித்து முயன்றால் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்து காணப்படும். சிறிது கவனமுடன் நம்பிக்கையாக உங்கள் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் உறவில் நல்லிணக்கம் ஏற்படுத்த இயலும்.

தேவையான சமயத்தில் உங்களுக்கு பண உதவி கிடைக்கும். பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் கிடைக்கும்.

கண்களில் எரிச்சல் ஏற்படலாம். இதனால் சில பாதிப்புகள் உண்டாகலாம்.

## ரிஷபம்

இன்றைய நாளை பொறுமையுடன் கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மனதிற்கு நன்மை கிடைக்கும்.

பணிகளை மேற்கொள்ளும் போது சிறிது போராட வேண்டியிருக்கும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணியில் தவறுகள் நேராத வகையில் திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் உரையாடும் போது கவனம் தேவை.

செலவுகள் அதிகமாக காணப்படும். ஆனால் பணம் குறைவாக இருக்கும். ஸ்திரத்தன்மைக்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

## மிதுனம்

இன்று போராட்டங்கள் நிறைந்திருக்கும். பொறுமை மிக அவசியம். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். அதிக அளவு முயற்சி எடுத்து பணிகளை ஆற்ற வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் அதிருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் துணையுடன் கள்ளங்கபடமின்றி பழக வேண்டும்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். செலவினங்கள் அதிகரித்து காணப்படுவதால் பணத்தை செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கிய பாதிப்புகளை எதிர்கொள்வீர்கள் கால் வலி ஏற்படலாம். நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கலாம்.

## கடகம்

வீட்டில் நடத்தவிருக்கும் விசேஷங்களை தள்ளிப் போடுதல் நல்லது. விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலம் நிலைமையை சீராக பராமரிக்கலாம்.

இன்று பணியில் அனுகூலமான சூழ்நிலை காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். பணிகளை விரைந்தும் முடிப்பீர்கள்.

உணர்ச்சிவசப்படாதீர்கள். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று பயணத்தின் பொழுது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று தோல் சம்பந்தமான பிரச்சினை உங்களை பாதிக்கும். எண்ணெய் உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.

## சிம்மம்

இன்று அனுகூலமான நாளாக இருக்கும். சிறிய அளவு முயற்சியில் உங்கள் பணிகளை முடிப்பீர்கள். புதிய முதலீடுகள் இன்று லாபகரமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் திறமை பாராட்டப்படும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரும்பி ஆற்றுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்வீர்கள்.

உங்களிடம் அதிக அளவு பணம் காணப்படும். குடும்ப வளர்ச்சிக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## கன்னி

இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். புதிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.வெளியிடங்கள் மற்றும் விருந்துகளுக்கு செல்வது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

இன்று பணிகளை திறமையுடன் கையாளும் பொறுமை உங்களிடம் காணப்படாது.இதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. சூழ்நிலையைக் கையாள அறிவு பூர்வமாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து உங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுங்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தில் பணம் சம்பாதிக்க முயற்சிகள் செய்யலாம்.

## துலாம்

இன்று கவனமாக இருக்க வேண்டும். சூடான விவாதங்களுக்கு வாய்ப் புள்ளதால் அக்கம் பக்கத்தினருடன் கவனமாக பழக வேண்டியது முக்கியம்.உரையாடுவதற்கு முன் கவனம் தேவை.

இன்று பணியில் திருப்திகரமான நிலை இருக்காது. பணிச்சுமையை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காது.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும்.அவற்றை தவிர்த்தல் நல்லது.

அதிக யோசனை ஆரோக்கிய பாதிப்பை ஏற்படுத்தும். தியானப் பயிற்சி மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு நல்லது.

## விருச்சிகம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். பொறுமையாக இருக்க வேண்டும். சமயோசிதமாக செயல்பட வேண்டும்.

உங்கள் கடின உழைப்பு நற்பலன்களைத் தரும். உங்கள் சிறந்த அணுகுமுறை மூலம் பணியில் நிறைய சாதிப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடனான உறவில் புரிந்துணர்வு குறைந்து காணப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படாது. அதிக பணம் சம்பாதிப்பது கடினமாக இருக்கும்.

பதட்டம் மற்றும் அமைதியின்மை காரணமாக தொடை மற்றும் கால் வலியால் பாதிக்கப்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.12.2023

## தனுசு

இன்றைய நாள் சாதகமான நாளாக இருக்கும். புதிய மனிதர்கள் மற்றும் நபர்களின் தொடர்புகள் ஏற்படும். அதன் மூலம் புதிய அனுபவம் ஏற்படும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் ஆற்றிய பணிக்காக உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரத்தை பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் இருவர்க்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இது உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிக்க உதவும்.

இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற திட்டமிடாத விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கிய பிரச்சினைகள் காணப்படாது.

## கும்பம்

இன்றைய நாள் சீராக இருக்கும். நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணியில் திருப்தி காண முடியாது. தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே மிகவும் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள். உங்கள் துணையிடம் கனிவாக நடந்துகொள்ளுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி சுமாராக காணப்படும். இன்று பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். ஒவ்வாமை காரணமாக இருமல் ஏற்படும்.

## மகரம்

இன்றைய நாள் சுமுகமாக இருக்கும். இன்று உங்கள் பணிகளை முடிக்க முடியும். இன்று உங்களின் வளர்ச்சி உறுதி. நீங்கள் அமைதியுடன் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள்.

இன்று பனிச் சுமை அதிகமாக காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகுங்கள்.

இன்று உங்கள் மனதில் நம்பிக்கையான எண்ணங்கள் காணப்படும். அதனை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். சிறப்பான தருணங்களை பகிர்ந்துகொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். நிதி வளர்ச்சி மேம்படுத்துவதில் உங்களுக்கு இருக்கும் திறனை நீங்கள் உணர்வீர்கள்.அதிக வேலை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மீனம்

உங்கள் முடிவுகளை செயலாக்குவதில் நேர்மை வேண்டும். மனதில் குழப்பங்கள் கொள்ள வேண்டாம். உங்கள் செயல்களை கவனமாக முடிவு செய்து திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மிகுந்த முயற்சியுடன் பணியாற்ற வேண்டும். வீட்டுப் பிரச்சினைகள் பணியை பாதிக்காவண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடன் இருக்க வெளியிடங்களுக்குச் சென்று வாருங்கள். திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை காணுங்கள். இதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி மற்றும் இருமல் காரணமாக சில அசௌகரியங்களை உணர்வீர்கள்.



